ஸன்மார்க்கப்ரதர்சினீ

Vol. 3. | APRIL, 1936. | No. 8.

मर्त्यानमर्त्यान् कुरुते
शुद्धाद्वैत सुधारसैः ।
वन्दे गिरिसुताकान्तं
यस्तं शंकरसद्गुरुम् ॥

மதுரை
அத்வைத ஸபையின்
ஆதரவில்
ஸ்ரீ சங்கர ஜயந்தி
மஹோத்ஸவம்
22—4—36 முதல்
26—4—36 வரை
மதுரைமாநகரில்
நடைபெறும்.

மாதப் பதிப்பு

பத்ரிகாசிரியர்: சாஸ்திர ரத்னம் தேதியூர் சுப்பிரமணியசாஸ்திரிகள்.
மதுரை (S. I.)

[illegible]

1995

ஸ்ரீமத் பாகவதம்

ச்ருதி கீதை—தொடர்ச்சி.

அநேகம் ஆத்மாக்கள் இருப்பதாக ஆகிவிடும். அப்படி இருக்கும்போது, பூர்வ கர்மாவின் ஸுகதுக்க ரூபமான பலன்களை அனுபவிக்கிற ஆத்மா எவன் என்று நிர்ணயம் செய்ய முடியுமா? முடியவே முடியாது. அந்த அம்சத்தில் அந்த ஸாங்க்யர்கள் பின்வாங்க வேண்டித்தான் வரும். ஆகையால் ஸாங்க்யர்கள் மதமும், **एकमेवाद्वितीयं ब्रह्म, तत्वमसि** (𑌏𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, 𑌤𑌤𑍍𑌵𑌮𑌸𑌿) (ஏகமேவாத்வதீயம் ப்ரம்ம, தத்வமஸி) என்ற ச்ருதிகளுக்கு விருத்தமானதினால், முமுக்ஷுக்களுக்கு ஆதரவு செய்யத்தகுந்ததல்ல.

அவ்விதமே மீமாம்ஸகர்கள் கர்மபலத்தையே நித்யமென்று சொல்கிறார்கள். **यत्कृतकं तदनित्यं,** (𑌯𑌤𑍍𑌕𑍃𑌤𑌕𑌂 𑌤𑌦𑌨𑌿𑌤𑍍𑌯𑌂) (யத்க்ருதகம் ததநித்யம்) என்ற ந்யாயத்தால் கர்மாவினால் ஆரப்தமான ஸ்வர்க்காதிபலம் அநித்யமாகத்தானிருக்கவேண்டும். **तद्यथा इह कर्मचितो लोकः क्षीयते। एवमेवामुत्र पुण्यचितो लोकः क्षीयते॥** (𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 𑌇𑌹 𑌕𑌰𑍍𑌮𑌚𑌿𑌤𑍋 𑌲𑍋𑌕𑌃 𑌕𑍍𑌷𑍀𑌯𑌤𑍇। 𑌏𑌵𑌮𑍇𑌵𑌾𑌮𑍁𑌤𑍍𑌰 𑌪𑍁𑌣𑍍𑌯𑌚𑌿𑌤𑍋 𑌲𑍋𑌕𑌃 𑌕𑍍𑌷𑍀𑌯𑌤𑍇) (தத்யதா இஹ கர்மசிதோ லோக: க்ஷீயதே। ஏவமேவாமுத்ர புண்யசிதோ லோக: க்ஷீயதே) என்ற ச்ருதிக்கு விருத்தமானதினால் மீமாம்ஸகர்களுடைய மதமும் முமுக்ஷுக்களுக்கு அவச்யமில்லாதது.

இவ்விதம் வெவ்வேறாக ஒவ்வொரு மதாசார்யர்களும் ஒவ்வொரு ஸித்தாந்தத்தைக் கல்பித்துக்கொண்டிருந்தால் எந்த ஸித்தாந்தத்தை ஆச்ரயித்து, எவ்விதமான ஸித்தாந்தம்தான் முக்யமென்று அறிந்து எப்படி ஜிக்ஞாஸுக்கள் அனுபவித்துக்கொண்டு வரமுடியும்? மேற்சொன்ன வாதங்களெல்லாம் ஜீவன் வேறு, ஈச்வரன் வேறு என்ற ஜீவேச்வரபேதம் ஸித்தித்தால் நிலைக்கு நிற்கும். அப்படி ஜீவேச்வர பேதம் இல்லாதபோனால் மேற்சொன்ன வாதங்களெல்லாம் ஆபாஸமான வாதங்களாகத்தான் ஆகும். ஜீவேச்வரபேதமோ சாஸ்த்ர ஸம்மதம் இல்லை. ஜீவனும் சேதனம்தான், ஈச்வரனும் சேதனம்தான், ஒன்றான சேதனத்தின் ஸ்வபாவத்தை வேறுபடுத்த முடியாது. வேறுபடுத்தவேண்டுமானால் குணத்தினால்தான் வேறுபடுத்தவேண்டும். ஸமுத்ரத்தில் தர்ப்பணம் செய்கிறகாலத்தில் அந்த ஸமுத்ர ஜலத்தினாலேயே அதே ஸமுத்ரத்தை த்ருப்தி செய்விக்கிறோம். அப்படியே தீபபூஜாகாலத்தில் ஒரு தீபத்தை பூஜ்யமாகவும், மற்றொரு தீபத்தை அதே பூஜைக்கே உபகரணமாகவும் வைத்துக்கொள்கிறோம். ஒன்றான ஜலத்தை இவ்விதம் இருவகையாகப் பிரிப்பது ஸ்வபாவத்தாலில்லை. ஆதார விசேஷத்தாலோ, மந்த்ர தந்த்ராதிகளாலோதான் அவ்விதமான பிரிவு வரவேண்டும். அப்படியே ஒரே மதுரமான பதார்த்தத்தை அநேகவிதமான ஆகாரத்தால் வெவ்வேறு போல் தோன்றச்செய்தாலும் ஸ்வபாவத்தில் மதுரமான பதார்த்தம் ஒன்றுதான். எது மாயையினுடைய ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களுக்கு பரதந்த்ரமாக ஆகிறதோ, அதற்கு ஆகாரமுண்டு. ஆகாரபேதத்தால் வஸ்துவையும் வேறுபடுத்திவிடலாம். பரமாத்மசைதன்யமோ, குணபரதந்த்ரனல்ல. ஸகுணப்ரம்மத்தினிடத்திலேயே ஸகல வேதங்களையும் ப்ரதிபாதனம் செய்கிற வாதிகளும் குணபாரதந்த்ரமாக பரமாத்மாவை ஒப்புக்கொள்ளமுடியாது. அப்படி

யானால் ஸ்வாதந்த்ர்யம் போய்விடுமே? பகவானுக்கு நிரங்குசமான ஐச்வர்யத்தை எவ்விதம் சொல்லமுடியும்? மேலும் ஜடமான குணங்களுக்கு சேதனமான பரமாத்மாவை தங்களுக்கு அதீனமாகச் செய்துகொள்ள எப்படி ஸாத்யமாகும்? எங்கும் ஜடங்களைத் தான் சேதன பரதந்த்ரமாக காண்கிறோமேயல்லாமல், சேதனம் ஜடபரதந்த்ரமானதாக காணப்படவில்லை.

ஆகையால் பரமாத்மாவுக்கு குணங்களுடைய பாரதந்த்ர்யமே ஸித்திக்காது. ஸ்த்ரீக்கு உட்பட்ட புருஷனைத்தான் ஸ்த்ரீமயன் என்று சொல்கிற வழக்கம். ஸ்த்ரீயைத் தனது ஆதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பவனுக்கு ஸ்த்ரீமயத்வம் வராதே! ஸ்த்ரீக்கு அதே புருஷன் ஸ்வாமியாக ஆகிறபடியால், ஒருஸமயத்தில் அவளுடன்கூட இருந்தாலும், மற்றொரு ஸமயத்தில் அவளைவிட்டுப் பிரிந்திருக்க சக்தியுள்ளவனாகத்தான் இருப்பான். அவ்விதமிருந்தால் தானே அந்த ஸ்த்ரீக்கு அவன் ஸ்வாமி என்பது ஸித்திக்கும். அதுபோல், இந்த பரமாத்மாவும் மூன்று குணங்களுக்கும் உட்பட்டால்தான், த்ரிகுணமயன் என்று சொல்லலாம்.

குணபாரதந்த்ர்யமோ பகவானுக்குக் கிடையாது என்பது முன்பே சொல்லப்பட்டது. த்ரிகுணாத்மகமான மாயைக்கு ஸ்வாமியாகத்தான் பகவான் ஆகமுடியும். த்ரிகுணாத்மகமான மாயா விஷயத்தில் பகவானுக்கு ஸ்வாதந்த்ர்யம் இருக்கிறது என்பது த்ரிகுணாத்மகமான மாயையை விட்டுப் பிரிந்திருக்கும் தன்மையை ப்ரகாசிக்ச் செய்தால்தானே, நன்றாய் வெளியாகும். அந்த அவஸ்தையில், ஸாக்ஷாத் பரமாத்மா நிர்க்குணம்தானே. அந்த ஸந்தர்ப்பத்தால்தான் லோககுருவான சங்கர பகவத் பாதாளும் அந்த ப்ரம்மத்தினிடத்தில் ஸர்வ வேதங்களுடைய ஸமந்வயத்தை ப்ரதிபாதனம் செய்து அத்

வைதத்தை நிலைநாட்டினார்கள், எப்போதும் ப்ரும்மம் ஸகுணம் என்றால், குணபாரதந்த்ர்யம் பரமாத்மாவுக்கு வந்துவிடும் என்பதை அறியவும். ஆகையால் பரமாத்மா ஸகுணம் என்பது உண்மை இல்லை, ஜலம் சுடுகிறது என்பதுபோல்தான் ஔபாதிகமாக ஆகும்.

ஆகையால் சைதன்யத்தை ஸ்வபாவத்திலோ பிரிக்கமுடியாது. குணத்தால் பிரிக்கலாமோ என்றால், சைதன்யம் நிர்க்குணமாக ஆகிவிட்டது. இவ்விதம் ஸ்வபாவத்தாலும், குணத்தாலும் சைதன்யம் பிரிக்கமுடியாமலிருக்கும்போது ஜீவேச்வர பேதத்தை ஒப்புக்கொண்டு ஜீவ பரஸ்பர பேதத்தை ஒப்புக்கொள்கிற ஸாங்க்ய மதம் சாஸ்த்ர ஸம்மதமாக ஆகாது.

அவ்விதமே, சைதன்யம் ஒன்றாக இருக்கும்போதும், ஸஜாதீய, விஜாதீய, ஸ்வகதபேத சூன்யமாய் இருக்கும்போதும், சைதன்யத்திற்கு விஜாதீயமான ப்ரபஞ்சத்திற்கு ஸ்வபாவமாகவே ஸத்தை இல்லாததினால், உத்பத்திக்கு முன்பாக ஜகத் இல்லவே இல்லை, என்ற ஆரம்பவாதம்தான் எவ்விதம் ஸித்திக்கும்.

சைதன்யம் ஒன்றாயிருக்கும்போது ஜீவனுக்கு ப்ரம்மம் வேறு போல் ஒப்புக்கொண்டு, அந்த ஜீவனுக்கு ப்ரம்ம பாவமானது யோக மஹிமையினால்தான் புதிதாக வருகிறதென்று சொல்கிற பாதஞ்ஜல யோக ஸித்தாந்தமும் பிசகானதுதான்.

அவ்விதம், ப்ரம்மத்திற்கு வேறாக ஜகத் ஒன்று உண்மையில் இல்லாமலிருக்கும்போது, ஜகத்துக்குள்பட்ட கர்மபலத்தை நித்யமாகச்சொல்கிற மதமும் அவ்வளவு சாஸ்த்ர ஸம்மதமல்ல.

இவ்விதம் சித்ரூபமான பரமாத்மாவைக் காட்டிலும் ஜீவன் வேறாக இல்லாமலிருக்கும்போது, தான் வேறு என்ற ப்ரம்மத்தையே

பந்தமென்றும், தான் ப்ரம்மம் என்ற அநுபவத்தையே மோக்ஷமென்றும் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்க, 21 விதமான மேற்சொல்லிய துக்கங்களுடைய நாசமே மோக்ஷம் என்று சொல்கிற நையாயிகர்களுடைய மதமும் முமுக்ஷுக்களால் ஆதரிக்கத்தகுந்ததல்ல.

ப்ரம்மத்திற்கு வேறாக ப்ரபஞ்சமே இல்லாதிருக்க, 21 விதமான துக்கம் என்றதே பொய்யாயிருக்கும்போது அதனுடைய நாசத்தையே மோக்ஷம் என்று சொன்னால், மோக்ஷம் என்றதும் மித்யாபூதமானதாகத்தான் ஆகும்.

अनीशया शोचति मुह्यमानः

𑌅𑌨𑍀𑌶𑌯𑌾 𑌶𑍋𑌚𑌤𑌿 𑌮𑍁𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑌃

(அநீசயா சோசதி முஹ்யமாந:)

என்ற ச்ருதியால் அக்ஞானமே பந்தமென்று தெரியும்போது அந்த ச்ருதிக்கு நேர்விரோதமாக 21 ப்ரகாரமான துக்கத்தை பந்தமென்றும் அதன் நாசத்தையே மோக்ஷம் என்றும் சொல்வது ரொம்பவும் தப்பானது.

பகவானை குணமயன் என்று நினைத்துக்கொண்டு அதனால் ஜீவேச்வர பேதத்தையும் ப்ரசுரப்படுத்துவது, ஏ, வாஸுதேவ பரப்ரம்மமே, உன்னுடைய ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளாததான அக்ஞானத்தால் ஏற்பட்டதே ஒழிய, உண்மையில் இல்லை. ஆனால் அக்ஞானம் என்று ஒன்று இருப்பதாக நினைக்கவேண்டாம். அக்ஞானம் என்ற மாயைக்கு நீ விலக்ஷணமான வஸ்து. நீ சிதேகாஸன். அவ்விதமான உன் ஸ்வரூபத்தில் அக்ஞானம் உண்மையாக ஏற்பட ந்யாயமில்லை. ஸூர்யனை இருட்டு மறைக்குமா? அதுபோல் அக்

ஞானத்தால் உனக்கு மறைவே இல்லை. அக்ஞானத்தால் நீ மறை பட்டிருக்கிறாய் என்பது ஜீவனுக்கு உன்னுடைய ஸ்வரூபம் புலப்படவில்லை என்பதைத்தான் விளக்கும் அன்னியில், உனக்கு அக்ஞானத்தால் ஆவரணம் (மறைதல்) என்பதே இல்லை. கல்பிதமான அக்ஞானத்தால் உண்மையான உனக்கு மறைதல் எவ்விதம் ஏற்படும்? நீ சுத்தமான பரம்பொருள்தான். உன் ஸ்வரூபத்தை அறிகிறதோ ரொம்பவும் ச்ரமமானது. வாதிகளுடைய விப்ரதிபத்திகளும் ஜிக்ஞாஸுக்களுடைய மனதைக் கலக்கிவிடுகிறது. ஆகையால் உன்னுடைய தத்வத்தை அறிந்துகொள்ளவேண்டும் என்ற விஷயத்தில் ச்ரமத்தை அடைவதைக் காட்டிலும் உன்னுடைய சரணாரவிந்தத்தில் மனதை ஈடுபடுத்தி பக்தியோகத்தை கைக்கொள்வதே சாஸ்த்ர ஸம்மதமாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்குவிதமான புருஷார்த்தங்களுக்கும் பக்தி ஸாதனமாயும் ஆகிறது. பரிபாகத்தில் (பலம்) ஐந்தாவது புருஷார்த்தமாகவும் பக்தியே ஆகிவிடுகிறது. பாகவதாளுடைய ஸித்தாந்த ரீதியாக பக்தி என்பது ஐந்தாவது புருஷார்த்தமென்றே சொல்லப்படும். ஆகையால் ஏ, வாஸுதேவ ப்ரம்மமே! உன்னிடத்தில் அசஞ்சலமான பக்தியை ப்ராணிகளுக்குக் கொடுத்து ப்ராணிகளைக் க்ருதார்த்தர்களாகச் செய்யவேண்டும் என்று ச்ருதிகளே பகவானை ஸ்தோத்ரம் செய்கின்றன.

(தொடரும்)

‘ஸந்திக்தத்வம்’ (ஸந்திக்தத்வம்) என்றது ஏற்பட்டுவிட்டது. ‘सन्दिग्धत्व’ ‘ஸந்திக்தத்வம்’ (ஸந்திக்தத்வம்) இல்லாததால் ‘ब्रह्म’ ‘ப்ரஹ்மம்’ (ப்ரம்மம்) விசாரிக்கத் தகுந்ததில்லையென்றது மிகவும் தப்பு. பந்த நிவ்ருத்தி யென்ற பலம் ஏற்படாது என்று சொன்னதும் ஸரியல்ல.

‘दृश्यत्वं, जडत्वं, परिच्छिन्नत्वं’ ‘த்ருச்யத்வம், ஜடத்வம், பரிச்சின்னத்வம்’ (த்ருச்யத்வம், ஜடத்வம், பரிச்சின்னத்வம்) என்ற மூன்று ஹேதுக்களால் ஜாகரப்ரபஞ்சமும் பொய்தான் என்பதில் யாதொரு ஸந்தேஹமுமில்லை. ஸ்வப்ன ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் வைலக்ஷண்யம் ஜாகர ப்ரபஞ்சத்தில் இருப்பதாகவே ஒப்புக்கொள்வோம். அதனால் ஒருவிதமான இஷ்டஸித்தியையுங்காணோம். ஜாகர ப்ரபஞ்சத்தில் ஸத்யத்வம் ஸித்திக்கிறதே அதுதான் இஷ்டஸித்தி என்றாலோ அது ஸம்பவிக்காது. ஸ்வப்ன வைலக்ஷண்யம், ஸத்யத்வம் என்றதை ஸாதித்துக் கொடுப்பதற்குக் காரணமாக ஆகாது. रज्जुसर्पादि, ரஜ்ஜு ஸர்ப்பாதி (ரஜ்ஜு ஸர்ப்பாதி) களில் ஸ்வப்ன ப்ரபஞ்சத்தினுடைய வைலக்ஷண்யம் இருக்கிறது. ஸ்வப்ன ப்ரபஞ்சத்தில் கல்பிதமான ஸர்வ பதார்த்தங்களுக்கும் ஆத்மாவே அதிஷ்டானம். रज्जुसर्पादि, ரஜ்ஜு ஸர்ப்பாதி (ரஜ்ஜு ஸர்ப்பாதி) களிலேயோ அநாத்மாவாகிய रज्वादि, ரஜ்வாதி (ரஜ்வாதி) கள் அதிஷ்டானம். ஆகையால் அநாத்மாவை அதிஷ்டானமாகவுடைத்தான ரஜ்ஜு ஸர்ப்பாதிகளில், ஆத்மாவை அதிஷ்டானமாகவுடைய ஸ்வப்ன ப்ரபஞ்சத்தினுடைய வைலக்ஷண்யம் நிர்விவாதம்.

இவ்விதம் ஸ்வப்ன ப்ரபஞ்சத்தினுடைய வைலக்ஷண்யம் ரஜ்ஜு ஸர்ப்பாதிகளில் இருப்பதைக்கொண்டு ரஜ்ஜு ஸர்ப்பாதிகளுக்கு ஸத்யத்வம் வந்துவிடுமா? ஆகையால், ஸ்வப்ன ப்ரபஞ்சத்தினுடைய வைலக்ஷண்யம் ஜாகர ப்ரபஞ்சத்தின் ஸத்யத்வத்தை ஸாதித்துக் கொடுக்கக்கூடிய சக்தியுள்ளதாக ஆகாது. தவிர, ஸ்வப்ன ப்ரபஞ்சத்தினுடைய வைலக்ஷண்யமே ஜாகர ப்ரபஞ்சத்தில் இல்லை. ஸ்வப்ன ப்ரபஞ்சத்தில் வஸ்து அடிக்கடி மாறுகிறது; ஜாகர ப்ரபஞ்சத்தில் வஸ்து ஒரேவிதமாக இருக்கிறதே என்று சொன்னதும் சரியல்ல. ஜாகர ப்ரபஞ்சத்திலும் வஸ்து மாறத்தான் மாறுகிறது. ஸ்வப்ன

ப்ரபஞ்சத்தில் மாமரம் தென்னைமரமாக மாறுகிறது என்றது சரி; ஆகிலும், மாமரத்தின் ஸ்வரூபம் மறைந்துதான் பிறகு தென்னைமரமாகத் தோன்றுகிறது. அதுபோல், ஜாகர ப்ரபஞ்சத்திலும் ஸகல மனிதர்களுக்கும் ஏற்படும் மறைவு என்றது மரணந்தான். அதற்குப் பிறகு முன்னிருந்த ஜாதி, குலம், கோத்ரம், வயது இவைகளுடனே வருவதென்ற நிச்சயமில்லை. அநேகமாய் மாறத்தான்மாறும். அது போலவே கடபடாதிகளான வஸ்துக்களுக்கும் அடிக்கடி மாறுதல் இருக்கிறது. கடத்தை யழித்து வாணையாகச் செய்யக்கூடாதா? படத்தை யழித்துக் கயிறுகச் செய்யக்கூடாதா? தவிர இந்த ஜாகர ப்ரபஞ்சத்தில் ஒரு வஸ்துவாவது எந்தக் காலத்திலும் ஒரேவிதமாக இருக்கிறதென்பது இல்லை. ஒரு புருஷனுக்கே ஒரு வஸ்து ஒரு ஸமயம் ஸுகரூபமாக விளங்குகிறது; அதுவே மற்றொரு ஸமயத்தில் துக்க ரூபமாக விளங்குகிறது; அதுவே மற்றொரு ஸமயத்தில் ஸுகதுக்க விலக்ஷண ஸ்வரூபமாக விளங்குகிறது. இப்படி எல்லா ப்ரபஞ்சத்தையும் விசாரிக்கப் பார்க்கலாம்.

ஆகையால், ஜாகர ப்ரபஞ்சத்தில் एकरूपेण प्रतीयमानत्वं, [illegible] (ஏகரூபேண ப்ரதீயமாநத்வம்) என்ற ஹேதுவானது அஸித்தமாகிறது. ஸ்வப்ன ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் ஜாகர ப்ரபஞ்சத்திற்கு ஒரு அம்சத்திலும் வைலக்ஷண்யமில்லை. ஸ்வப்னத்திற் காணப்பட்ட பதார்த்தங்கள் ஸ்வப்னத்திற்கு வேறான ஜாகரத்தில் இல்லாதபடியினாலேயல்லவா பொய் என்று தீர்மானிக்கிறோம். அதுபோலவே, ஜாகராவஸ்தையில் காணப்படும் பதார்த்தங்களும் ஜாகரத்தைக்காட்டிலும் வேறான ஸ்வப்னத்தில் இல்லாமற் போகிறபடியால் ஜாகரப்ரபஞ்சத்தையும் பொய் என்று சொல்வதற்கு என்ன ஆக்ஷேபணை? பின்னாலுண்டாகக்கூடிய ஞானத்தால் பாதிக்கப்படுகிறது என்ற காரணத்தாலல்லவா ரஜ்ஜு ஸர்ப்பத்தையும், சுக்தி ரஜதத்தையும், பொய் என்று சொல்கிறோம், அதுபோல், இப்ரபஞ்சத்திற்கும் மஹாவாக்ய ஜன்யமான ‘अहं ब्रह्मास्मि’ ‘[illegible]’ (அஹம் ப்ரம்மாஸ்மி) என்ற ஞானத்தால் அழிவு உண்டென்பது நிச்சயம். அதற்கடையாளம் दृश्यत्वं, [illegible]

(த்ருச்யத்வம்) ஒன்றேபோதும். அப்படியிருக்க ஏன் ப்ரபஞ்சத்தை பொய் என்று சொல்லக்கூடாது? ப்ரபஞ்சம் நிஜமானால் ஸுஷுப்தியில் தோன்றவேண்டுமே, அவ்விதம் தோன்றவில்லை. ஆகையால்,

“विमतम् (जगत्) मिथ्या, दृश्यत्वात्, जडत्वात्, परिच्छिन्नत्वात्, शुक्तिरौप्यवत्”

“[illegible] (ஜகத்), [illegible], [illegible], [illegible], [illegible], [illegible]”

(விமதம் (ஜகத்) மித்யா, த்ருச்யத்வாத், ஜடத்வாத், பரிச்சிந்நத்வாத், சுக்திரௌப்யவத்)

என்ற அனுமானத்தால் ப்ரபஞ்சம் பொய் என்பது நிச்சயம்.

தவிர இப்ரபஞ்சம் அஞ்ஞானகல்பிதமென்று ப்ரபஞ்சத்திலுள்ள ஸுக துக்க மோஹம் என்ற ஸத்வகுண ரஜோகுண தமோ குணங்களின் கார்யங்களால் தெரியவருகிறது. त्रिगुणात्मकं अज्ञानं, [illegible] (த்ரிகுணாத்மகம் அக்ஞாநம்) அந்த மூன்று குணங்களின் கார்யங்களும் ப்ரபஞ்சத்தில் பாஸிக்கின்றன. அஞ்ஞான கல்பிதம் இல்லாதபக்ஷத்தில் அஞ்ஞான குணத்தின் கார்யம் ஜகத்தில் எப்படி பாஸிக்கும்? அஞ்ஞான கல்பிதங்களெல்லாம் பொய் என்பது ஸித்தம். ஆகையால், ப்ரபஞ்சமும் பொய் என்றதில் ஒருவிதமான ஆக்ஷேபணையுமில்லை. ப்ரும்ம விசாரத்தால் உண்டாகப்பட்ட ப்ரும்ம க்ஞாநத்தால் பந்தரூபமான ப்ரபஞ்ச நிவ்ருத்தி என்ற பலமும் ஏற்படும். முன்சொன்ன ப்ரகாரம் सन्दिग्ध, [illegible] (ஸந்திக்த) மாயும் பலவத்தாயும் இருக்கிற ப்ரும்மம் என்ற விஷயமும், பந்த நிவ்ருத்தி என்ற பலமும் ஸம்பவிக்கிறபடியால், இந்த ப்ரும்மவிசார சாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தகுந்ததுதான் என்பது ஸித்தாந்திகளின் ஸித்தாந்தம்.

பூர்வபக்ஷம்:— लिङ्, लोट्, तव्यं, [illegible] (லிங், லோட், தவ்யம்) என்று மூன்று விதம் விதிகள். அதாவது: மனுஷ்யர்களை ஸத்கார்யத்தில் ப்ரவ்ருத்திக்கச் செய்யும் நிபந்தனை

செய்யட்டும், செய், செய்யத்தகுந்தது என்பன. இவைகளின் அர்த்தம். "यावज्जीवं अग्निहोत्रं जुहुयात्" "सत्यं वद," "सत्यान्न प्रमदितव्यं" "𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌂 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌂 𑌜𑍁𑌹𑍁𑌯𑌾𑌤𑍍" "𑌸𑌤𑍍𑌯𑌂 𑌵𑌦" "𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑍍𑌨 𑌪𑍍𑌰𑌮𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌂" ("யாவஜ்ஜீவம் அக்நிஹோத்ரம் ஜுஹுயாத்" "ஸத்யம் வத," "ஸத்யாந்நப்ரமதி தவ்யம்") என்ற வாக்யங்கள் மேற்காட்டிய மூன்று நிபந்தனைகளுக்கும் உதாஹரணங்கள். இந்த மூன்றுவிதமான நிபந்தனைகளுக்குள் ஏதாவது ஒரு நிபந்தனையோடு கூடினதான வாக்யமாயிருந்தால்தான் அதில் சொல்லப்பட்டதை அவச்யம் தவறாமல் அநுஷ்டானம் செய்யவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படும். அப்படி நிபந்தனைகளோடு கூடாததான வாக்யத்தால் சொல்லப்படும் விஷயத்தில் அநுஷ்டானஞ்செய்ய வேண்டிய ச்ரத்தை ஆதரவுடன் ப்ராணிகளுக்கு ஏற்படவும் ஏற்படாது. அந்த வாக்யத்திற்கு அந்த அர்த்தத்தில் தாத்பர்யம் இருக்கவும் இராது. இவ்விஷயங்கள் பூர்வ மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கின்றன.

ப்ரக்ருதத்தில் "अथातोब्रह्मजिज्ञासा" "𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾" (அதாதோப்ரம்மஜிக்ஞாஸா) என்ற ஸூத்ரத்திலோ, செய்ய வேண்டும்; செய்; செய்யத்தகுந்தது; என்ற மூன்றுவிதமான நிபந்தனைகளுக்குள், ஒருவிதமான நிபந்தனையும் இருக்கிறதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க, साधनचतुष्टयसंपत्ति, 𑌸𑌾𑌧𑌨𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌸𑌂𑌪𑌤𑍍𑌤𑌿 (ஸாதநசதுஷ்டயஸம்பத்தி)க்குப் பிற்பாடு வேதாந்த விசாரம் என்ற அர்த்தத்தில் இந்த ஸூத்ரத்திற்கு தாத்பர்யமில்லை என்றது நிச்சயம்; ப்ராணிகளுக்கு இதில் ஆதரவுடன் அநுஷ்டானஞ் செய்யவேண்டும் என்ற ச்ரத்தை ஏற்படாதென்பதும் நிச்சயம். நிபந்தனை இல்லாததான வாக்யம் அநுவாதக வாக்யமென்று பூர்வ மீமாம்ஸையில் சொல்லப்பட்டிருக்கிறது. எங்கேயோ ஒரு ஸமயத்தில் எதற்காகவோ யாராலேயோ சொல்லப்பட்ட ஸமாசாரத்தை இது சொல்லுகிறது; ஸ்வயமாக ஒன்றும் சொல்லவில்லை என்பது 'அநுவாதகம்' என்ற சப்தத்தின் அர்த்தம். அப்படிப்பட்ட அநுவாதக வாக்யங்களுக்கு ஸ்வார்த்தத்தில் ப்ராமாண்யமில்லை. "अग्निर्हि

मस्य भेषजं" "𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌹𑌿𑌮𑌸𑍍𑌯 𑌭𑍇𑌷𑌜𑌂" (அக்னி: ஹிமஸ்யபேஷஜம்) என்று கர்மகாண்டத்தில் ஒரு வாக்யம். குளிருக்கு அக்னியினுடைய ஸமீபமிருப்பது மிகவும் ஸுகமாயிருக்கும் என்பது அதன் அர்த்தம். இது லோகத்தில் ப்ரஸித்தம். ப்ராணிகளுக்குத் தெரியாத அர்த்தமல்ல. ஆகையால். ப்ராணிகளுக்குத் தெரிந்த விஷயத்தைச் சொல்லுகிறபடியால் அநுவாதக வாக்யம். இதற்கு ஸ்வார்த்தத்தில் ப்ராமாண்யம் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல், இந்த ஸூத்ரமும் அநுவாதகமாக ஆகுமானதால் साधनचतुष्टय संपत्ति, 𑌸𑌾𑌧𑌨𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌸𑌂𑌪𑌤𑍍𑌤𑌿 (ஸாதன சதுஷ்டயஸம்பத்தி) யை ஸம்பாதித்துத்தான் ப்ரும்ம ஸாக்ஷாத்காரத்துக்குக் காரணமான வேதாந்த விசாரத்தைச் செய்யவேண்டுமென்ற இதனர்த்தத்தில் ப்ராணிகளுக்கு ஆதரவு வேண்டாம். ஸாதனசதுஷ்டய ஸம்பத்திக்கும் வேதாந்த விசாரத்திற்கும் ஸாதன பலபாவ நிர்ப்பந்தமும் கிடையாது. ஸாதனபலபாவத்தைப் போதிப்பதற்காக अथ, 𑌅𑌥 (அத) சப்தத்திற்கு आनन्तर्यं, 𑌆𑌨𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌂 (ஆநந்தர்ய) அர்த்தமும் வேண்டாம். முமுக்ஷுக்களால் ஆதரவுடன் க்ரஹித்துக்கொண்டு அவச்யம் அநுஷ்டிக்கத்தகுந்ததான மோக்ஷ ஸாதன உபாயங்களை ப்ரகாசப்படுத்தவந்த இந்த ப்ரும்ம விசார சாஸ்த்ரத்தில் ஆதரவோடு க்ரஹித்து அவச்யம் அநுஷ்டானம் செய்யவேண்டுமென்ற ச்ரத்தையைக் கொடுக்காமலிருக்கிற இந்த "अथातो ब्रह्मजिज्ञासा" "𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾" (அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா) என்ற ஸூத்ரம் வ்யர்த்தம். அப்படி ச்ரத்தையைக் கொடுக்காமலிருப்பதற்கு விதியில்லாததே பெரிய காரணமாகுமென்பது பூர்வபக்ஷிகளின் எதிர்வாதம்.

ஸித்தாந்தம்:—"अथातोब्रह्मजिज्ञासा" "𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾" (அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா) என்ற ஸூத்ரத்தில் நிபந்தனையில்லாது போனாலும் 'செய்யத்தகுந்தது' என்ற நிபந்தனையைச் சேர்த்துக் கொள்கிறோம். நிபந்தனை இல்லாத இடத்தில் நிபந்தனையை अध्याहारं, 𑌅𑌧𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑌂 (அத்யாஹாரம்) பண்ணிக்கொண்டு வாக்யத்

தைப் பூர்த்தி செய்து கொள்ளலாம் என்று பூர்வ காண்டத்தில் அநேக ப்ரகரணங்களில் திர்மானிக்கப்பட்டிருக்கிறது.

सन्ध्या स्नानं जपोहोमः देवतानां च पूजनं ।
आतिथ्यं वैश्वदेवंच षट्कर्माणि दिने दिने ॥

𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌜𑌪𑍋𑌹𑍋𑌮𑌃 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂𑌚 𑌪𑍂𑌜𑌨𑌂 ।
𑌆𑌤𑌿𑌥𑍍𑌯𑌂 𑌵𑍈𑌶𑍍𑌵𑌦𑍇𑌵𑌂𑌚 𑌷𑌟𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌦𑌿𑌨𑍇 𑌦𑌿𑌨𑍇 ॥

(ஸந்த்யாஸ்நாநம் ஜபோஹோம: தேவதாநாம்ச பூஜநம் |
ஆதித்யம் வைச்வதேவம்ச ஷட்கர்மாணி திநே திநே ||

என்ற இடத்தில் ஒருவிதமான நிபந்தனையையுங் காணோம். செய்ய வேண்டும்; செய்; செய்யத்தகுந்தது; என்றவற்றுள் ஏதாவது இருக்கிறதா? ஒன்றுமில்லை. தினந்தோறும் ஆறு கர்மாக்கள் என்பது மட்டும் அதன் அர்த்தமாகிறது. இந்த வாக்யத்தில் நிபந்தனை இல்லாததால் இதற்கு स्वार्थप्रामाण्यं, 𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌂 (ஸ்வார்த்தே ப்ராமாண்யம்) கிடையாது; இது அனுவாதக வாக்யந்தான் என்று மீமாம்ஸகர்கள் இதைச் சொல்வார்களா? சொல்லமாட்டார்கள். யாதொரு காரணத்தால் "सन्ध्या" "𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾" (ஸந்த்யா) முதலான ஆறு கர்மாக்களும் மோக்ஷப்ரதங்களோ, அக்காரணத்தால், தினந்தோறும் புருஷர்கள் இந்த ஆறு கர்மாக்களையும் ச்ரத்தையுடன் செய்யவேண்டுமென்பது இந்த வாக்யத்தின் அர்த்தம் என்று, அந்த வாக்யத்தில் "कुर्यात्" "𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍" (குர்யாத்) என்ற விதியை அத்யாஹாரஞ்செய்துகொண்டு அந்த வாக்யத்தின் அர்த்தத்தை வெளியாக்கியிருக்கிறார்கள். ஆகையால், ப்ரதிவாதிகளான மீமாம்ஸகர்களே அபூர்வமான அர்த்தத்தைச் சொல்லுகிற வாக்யத்தில் விதி இல்லாது போனாலும் அந்த வாக்யத்திலுள்ள அர்த்தம் அபூர்வமானதால் (அதாவது: அந்த அர்த்தம் மற்றொரு ப்ரமாணத்தால் கண்டுபிடிக்கக்கூடாததாயிருக்கிறபடியால்) அந்த அர்த்தத்தில் ப்ராணிகளுக்கு ச்ரத்தையை உண்டாக்குவதற்கு விதியை அத்யாஹாரஞ்செய்துகொண்டு அந்த வாக்யத்தின் அர்த்தத்தை நயனஞ்

199513

செய்யவேண்டுமென்று மார்க்கத்தை ...பித்திருக்குங் காலத்தில் அந்த மார்க்கத்தை யனுசரித்து, இந்த "अथातोब्रह्मजिज्ञासा" "𑌅𑌥𑌾𑌤𑍋𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾" (அதாதோப்ரம்மஜிக்ஞாஸா) என்ற வாக்யத்தின் அர்த்தம் அபூர்வமாயிருப்பதால் (அதாவது: ஸாதனசதுஷ்டய ஸம்பத்திக்கும் ப்ரும்ம விசாரத்திற்கும் ஸாதனபலபாவம் உண்டு என்பது மற்றொரு ப்ரமாணத்தால் ஸுலபமாகக் கண்டு பிடிக்கக்கூடிய அர்த்தமாக இல்லாதபடியால்) இந்த அர்த்தத்தில் ப்ராணிகளுக்கு ச்ரத்தையை உண்டாக்க "कर्तव्यः" "𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃" (கர்த்தவ்ய:) என்ற விதியைச் சேர்த்துக்கொண்டு ஸாதனசதுஷ்டய ஸம்பத்திக்குப் பிற்பாடு ப்ரும்ம ஸாக்ஷாத்காரத்துக்குக் காரணமான வேதாந்த விசாரஞ்செய்யத்தகுந்தது என்று அர்த்தம் சொல்ல வேண்டும்.

ஆனாலும் "जिज्ञासा" "𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾" (ஜிக்ஞாஸா) என்ற பதத்திற்குள் "𑌜𑍍𑌞𑌾" "ज्ञा" (க்ஞா) धातु, 𑌧𑌾𑌤𑍁 (தாது) வின் ப்ரக்ருத்யர்த்தமான (பகுதி) ஞானத்திலோ, 'सन्' '𑌸𑌨𑍍' (ஸந்) ப்ரத்யயத்தின் (விகுதி) அர்த்தமான இச்சையிலோ, சேர்த்துக்கொண்டதான कर्तव्यः, 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 (கர்த்தவ்ய:) என்ற விதிக்கு அர்த்தம் ஸம்பவிக்கவில்லையே, இச்சையென்றதான அர்த்தத்தைவிட்டு 'सन्' '𑌸𑌨𑍍' (ஸந்) ப்ரத்யயத்திற்கு विचार, 𑌵𑌿𑌚𑌾𑌰𑌂 (விசாரம்) என்ற அர்த்தத்தைக் கல்பித்து कर्तव्यः, 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 (கர்த்தவ்ய:) என்ற விதியைச் சேர்ப்போமோ என்றாலும் அதுவும் சரியல்ல. வெளியிலிருந்துவந்த कर्तव्यः, 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 (கர்த்தவ்ய:) என்ற பதத்தை அந்வயிக்கிறதற்காக சப்தத்திற்கு ஏற்பட்டதான அர்த்தத்தைவிட்டு, இல்லாத அர்த்தத்தைக் கல்பிக்கிறது ந்யாயமா? ந்யாயமன்று.

ஆகையால், விதியை அத்யாஹாரஞ் செய்துகொண்டும் இந்த ஸூத்ரத்திற்கு सार्थक्य, 𑌸𑌾𑌰𑍍𑌥𑌕𑍍𑌯 (ஸார்த்தக்ய)த்தைச் சொல்ல முடியவில்லையே! 'लशुनभक्षणं' '𑌲𑌶𑍁𑌨𑌭𑌕𑍍𑌷𑌣𑌂' (லசுநபக்ஷணம்) செய்தும், उदरव्याधि, 𑌉𑌦𑌰𑌵𑍍𑌯𑌾𑌧𑌿 (உதரவியாதி) சமனமாகவில்லையே! இதென்ன கஷ்டம் என்று பூர்வபக்ஷிகள் கேட்கக்கூடும்,

அதற்குப் பதில்; அதாவது: 'ज्ञा, धातु' 'ஜ்ஞா, தாது' (க்ஞா தாது) வின் ப்ரக்ருத்யர்த்தமான ஞானத்தை அபரோக்ஷ ஞானமென்றே இந்த இடத்தில் சொல்லவேண்டும். பரோக்ஷ ஞானத்தால் ஒரு ப்ரயோஜனமும் இல்லையல்லவா! 'ज्ञा, धातु' 'ஜ்ஞா, தாது' (க்ஞா, தாது) வின் ப்ரக்ருதியின் அர்த்தமோ பரோக்ஷஞானந்தான் ஆகும். ஆகிலும், அதை अजहल्लक्षणा, அஜஹல்லக்ஷணா (அஜஹல்லக்ஷணை) யினுல் அபரோக்ஷ ஸாக்ஷாத்காரமென்று அர்த்தம் சொல்லுகிறோம். "काकेभ्योदधि रक्ष्यतां" "காகேப்யோ ததி ரக்ஷ்யதாம்" (காகேப்யோ ததிரக்ஷ்யதாம்) என்ற இடத்தில் அஜஹல்லக்ஷணைக்கு ஸமந்வயம் அதாவது: ஒரு ஸ்திரீ தன் குழந்தையைப்பார்த்து, தயிரைக்காக்கை கொத்தாமல் பார்த்துக்கொள் என்று சொன்னுள். அந்த இடத்தில் கேவலம் காக்கையிலிருந்துமட்டும் தயிரை ரக்ஷிப்பது போதாது. காக்கையைப்போல் பூனை, குரங்கு முதலான தயிருக்குக்கெடுதலைச் செய்யும் ப்ராணிகள் எவ்வளவோ அவ்வளவும் அந்த இடத்தில் காக்கையென்ற பதத்திற்கு லக்ஷணையினுல் அர்த்தமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அதாவது: வாச்யார்த்தத்தை விடாமல் வாச்யார்த்தம்போலொத்த மற்ற அர்த்தங்களையும் எடுத்துக்கொள்ளக் கூடிய இடத்தில் அஜஹல்லக்ஷணையென்று சொல்லப்படும்.

ப்ரக்ருதத்திலும் 'ज्ञा, धातु' 'ஜ்ஞா, தாது' (க்ஞா தாது) வின் ப்ரக்ருத்யர்த்தமான பரோக்ஷஞானம் என்ற வாச்யார்த்தத்தையும் விடாமலே அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் என்றதையும் லக்ஷணையினுல் எடுத்துக்கொள்கிறபடியால் ब्रह्मज्ञानं, ப்ரஹ்மஜ்ஞானம் (ப்ரம்மக்ஞானம்) என்ற இடத்தில் ப்ரும்ம ஸாக்ஷாத்காரம் என்று அஜஹல்லக்ஷணை யினுல் சொல்லப்படுகிறது. 'ब्रह्मजिज्ञासा' 'ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' (ப்ரம்மஜிக்ஞாஸா) என்ற இடத்தில் ப்ரும்ம ஸாக்ஷாத்காரத்தை அடைவதற்காக ஏற்பட்ட இச்சை என்பது அர்த்தம். ஸாதன சதுஷ்டய ஸம்பத்திக்குப் பிற்பாடு உண்டாகிற இச்சையாயிருக்கிற படியால் ஸாக்ஷாத்காரத்தை இச்சையாகத்தான் இருக்கவேண்டும். பரோக்ஷஞானேச்சை ஸாதனசதுஷ்டய ஸம்பத்திக்குப் பிறகுதானு வரவேண்டும். லோகபூஜ்யத்வம் வேண்டுமென்று நினைத்தாலே பரோ

க்ஷஞானேச்சை வந்துவிடும். அதற்கு ஸாதனசதுஷ்டய ஸம்பத்தி வேண்டுமா? ஆகையால் ஸாதனசதுஷ்டய ஸம்பத்திக்குப்பிற்பாடு உண்டாகிற இச்சை ப்ரும்ம ஸாக்ஷாத்கார இச்சைதான்.

தவிர, ஸாதனபலபாவத்தைப்போதிக்கிற விஷயத்தில் आनन्तर्य ஆநந்தர்ய (ஆநந்தர்ய)த்தை अथ, அத (அத) சப்தத்தின் அர்த்தமாகச் சொல்லிகிறபடியால் ஸாதனசதுஷ்டய ஸம்பத்திக்கும் ப்ரும்ம ஸாக்ஷாத்கார இச்சைக்கும் ஸாதனபலபாவம்போல் தோன்றுகிறது, அதுவோ ஸம்பவிக்காது. जानाति, इच्छति, यतते, ஜாநாதி, இச்சதி, யததே (ஜாநாதி, இச்சதி, யததே) என்ற ந்யாயத்தால் 'ब्रह्म साक्षात्कारः, मदिष्टसाधनं' 'ப்ரஹ்மஸாக்ஷாத்கார: மதிஷ்டஸாதநம்' (ப்ரம்மஸாக்ஷாத்கார: மதிஷ்டஸாதநம்) அதாவது: 'ब्रह्मसाक्षात्कारः मोक्षफलकः' 'ப்ரஹ்மஸாக்ஷாத்கார: மோக்ஷபலக:' (ப்ரம்மஸாக்ஷாத்கார: மோக்ஷபலக:) அதாவது: ப்ரும்ம ஸாக்ஷாத்காரமானது பரம புருஷார்த்தமான மோக்ஷத்தைக் கொடுக்கும் என்ற ஞானந்தான் ப்ரும்ம ஸாக்ஷாத்கார இச்சைக்குக் காரணமாகுமேயல்லது ஸாதன சதுஷ்டயஸம்பத்தி காரணமாக ஆகாது. ப்ரும்ம ஸாக்ஷாத்கார இச்சைக்குக்காரணமான ब्रह्मसाक्षात्कारः मोक्षफलकः 'ப்ரஹ்மஸாக்ஷாத்கார: மோக்ஷபலக:' (ப்ரும்ம ஸாக்ஷாத்கார: மோக்ஷபலக:) என்ற இஷ்டஸாதனதா ஞானத்திற்கு மட்டும் ஸாதனசதுஷ்டய ஸம்பத்தி காரணமாகும். ஸூத்ரத்திலோ, ப்ரும்ம ஸாக்ஷாத்கார இச்சைக்கும் ஸாதனசதுஷ்டய ஸம்பத்திக்கும் ஸாதனபலபாவம்போல் தோன்றுகிறது. அதுவே ஸம்பவிக்காது. அதற்காக இச்சையென்ற வாச்யார்த்தத்தைவிட்டு இச்சைக்குக்காரணமான இஷ்டஸாதனதா ஞானத்தை லக்ஷணையாய்ச் சொல்லத்தான்வேண்டும். அத்யாஹாரம் பண்ணிக்கொண்ட 'कर्तव्यः' 'கர்தவ்ய:' (கர்த்தவ்ய:) என்ற பதத்தி னுடைய அன்வயத்திற்காக ஸூத்ரத்தில் லக்ஷணைகல்பிக்கவேயில்லை. ஸூத்ரத்தில் 'अथ शब्द' 'அத ஶப்தம்' (அதசப்தம்) அன்வயிப்பதற் காகவே லக்ஷணை கல்பிக்கவேண்டியிருக்கிறது.

அதில் இச்சைக்குக்காரணயான ஞானத்தை லக்ஷணையாய்ச்சொல் லுவதைக் காட்டிலும், இச்சையின் கார்யமான விசாரத்தை லக்ஷணை

யாய்ச் சொல்லுவதனுல் மிகவும் பலன் ஸித்திக்கும். அதாவது: ஸாதன சதுஷ்டய ஸம்பத்தி ஏற்பட்டுவிடுமேயானுல் அது புருஷனை ப்ரும்ம ஸாக்ஷாத்காரத்துக்குக் காரணமான வேதாந்த விசாரபர்யந்தம்கொண்டு வந்துவிட்டுத்தான் நிற்கும் என்று அநேக ஜன்மாக்களில் அக்னிஹோத்ராதி கர்மாக்களைச்செய்து பரமேச்வரனைத் த்ருப்தி செய்வித்துப் பரமேச்வர ப்ரஸாதத்தால் அடையப்பட்ட ஸாதன சதுஷ்டய ஸம்பத்தியின் வைபவம் இப்பேர்ப்பட்டது என்பதை ச்லாகித்ததாக ஆகும்,

இச்சைக்குக்காரணமான ஞானத்தோடுதான் ஸாதனசதுஷ்டய ஸம்பத்திக்குக் கார்ய காரணபாவம் ஏற்படும். இச்சையோடு ஏற்படாது என்று சொல்லிவிட்டு,இச்சையின் கார்யமான விசாரத்தோடு ஸாதனசதுஷ்டய ஸம்பத்திக்குக் கார்ய காரணபாவம் சொல்லுவதின் தாத்பர்யம் என்னவென்றுல், அந்த ஸாதனசதுஷ்டய ஸம்பத்தி தன்பலனுன விசாரத்தைப் புருஷனுக்குக் கொடுக்கத்தான் ஞானத்தையுண்டுபண்ணி அதன் மூலமாக இச்சையை உண்டுபண்ணிற்று. அன்றி, ஞானத்தை மாத்திரம் உண்டுபண்ணிவிட்டு நாம் இருந்துவிடுவோம் என்ற எண்ணமில்லை. அந்த ஸாதனசதுஷ்டய ஸம்பத்தியின் லக்ஷ்யம் விசாரத்தில்தான். அதையனுசரித்து விசாரத்திற்கும் ஸாதனசதுஷ்டய ஸம்பதிக்கும் கார்யகாரணபாவம் சொல்லலாம். முதல் லக்ஷ்யம் इष्टसाधनताज्ञानं, இஷ்டஸாதநதாஜ்ஞாநம் (இஷ்டஸாதநதாக்ஞாநம்) பரமலக்ஷ்யம் விசாரம். நடுமத்தியிலுள்ள இச்சையானது ஸாதனசதுஷ்டய ஸம்பத்திக்கு லக்ஷ்யமன்று. முதல் லக்ஷ்யமான ஞானத்தோடு கார்யகாரணபாவம் சொல்லுவதைக்காட்டிலும், பரம லக்ஷ்யமான விசாரத்தோடு கார்யகாரணபாவம் சொல்லுவதிலுள்ள பலன்முன் ப்ரகாசப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால், ஸூத்ரத்திலுள்ள 'अथ' 'அத' (அத) சப்தம் அன்வயிப்பதற்காகவே விசார லக்ஷணை அவச்யமானபடியாலும், அந்த விசாரத்தில் அத்யாஹாரம் பண்ணப்பட்ட 'कर्तव्यः' 'கர்த்தவ்ய:' (கர்த்தவ்ய:) என்ற பதம் ஸுலபமாக அன்வயிக்கிறபடியாலும், ஸூத்ரம் நிபந்தனையோடு கூடிய விதியாக ஆகிவிட்டது. ஆகையால், அதற்கு ஸ்வார்த்தத்தில்

ப்ராமாண்யம் உண்டு. அதன் அர்த்தமாக வேதாந்த விசாரம் ஸகல ப்ராணிகளும் ஆதரவோடு அநுஷ்டானஞ் செய்யத்தகுந்தது என்றது ஸித்தமாகிறது. ஒரு தோஷமுமில்லை. ஸூத்ரம் सार्थकं, ஸார்த்தகம் (ஸார்த்தகம்) என்பது ஸித்தாந்திகளின் ஸமாதானம்.

ஸாதனசதுஷ்டய ஸம்பத்தியானது புருஷனுடைய முயற்சியினுல் ஸம்பவிக்கக்கூடியபடியால் ஸாதனசதுஷ்டய ஸம்பத்திக்குப் பிற்பாடு ப்ரம்ம ஸாக்ஷாத்காரத்திற்குக் காரணமான வேதாந்தவாக்ய விசாரமானது முமுக்ஷுக்களால் ந்யாயத்தோடு செய்யத்தகுந்தது என்பது ஸூத்ரத்தின் அர்த்தம்.

ஜிக்ஞாஸாதிகரணம் முற்றிற்று.

॥ ओम् ॥

॥ जन्माद्यधिकरणं ॥

𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌧𑌿𑌕𑌰𑌣𑌮𑍍 ।

ஜன்மாத்யதிகரணம்.

முதல் அதிகரணத்தில் ஸாதனசதுஷ்டய ஸம்பத்தியை ஸம்பாதித்த பிற்பாடு ப்ரம்ம ஸாக்ஷாத்காரத்துக்குக் காரணமான ப்ரம்ம விசாரமானது வேதாந்த வாக்ய மூலமாயும், ந்யாயமூலமாயும், குரு முகமாகச் செய்யத்தகுந்தது என்று தீர்மானிக்கப்பட்டது. அதில் **"लक्षणप्रमाणाभ्यां हि वस्तुनः वस्तुत्वसिद्धिः"** "𑌲𑌕𑍍𑌷𑌣𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌹𑌿 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌃 𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃" (லக்ஷணப்ரமாணாப்யாம் ஹி வஸ்துந: வஸ்துத்வஸித்தி:) என்ற ந்யாயத்தால் லக்ஷணம், ப்ரமாணம் இந்த இரண்டும் எந்த வஸ்துவுக்கு இருக்கின்றனவோ அதற்குத்தான் உயிர் உண்டு என்று தெரிகிறது. ஆகையால் பூர்வ ஸூத்ரத்தில் யாதொரு ப்ரம்மம் விசாரிக்கத்தகுந்ததென்று சொல்லப்பட்டதோ அந்த ப்ரம்மத்திற்கு லக்ஷணப்ரமாணங்களைச் சொல்லி அதை ஸாதிக்க வேண்டியது ஆவச்யகம். இல்லாவிடில் அந்த ப்ரம்மத்தின் ஸ்வரூபமே ஸித்திக்காதல்லவா? என்ற அபிப்ராயத்தால், அந்த ப்ரம்மத்திற்கேற்பட்ட தடஸ்த ஸ்வரூப லக்ஷணங்களைச் சொல்லுவதற்காக இந்த ஸூத்ரம் ஆரம்பிக்கப்படுகிறது.

"जन्माद्यस्ययतः"

"𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯𑌯𑌤𑌃"

(ஜன்மாத்யஸ்யயத:)

இந்த ஸூத்ரத்தில் **जन्मादि, अस्य, यतः,** 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿, 𑌅𑌸𑍍𑌯, 𑌯𑌤𑌃 (ஜந்மாதி, அஸ்ய, யத:) என்ற மூன்று பதங்கள் உள்ளன.

जन्मादि, 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿 (ஜந்மாதி) என்ற பதத்திற்கு **"जन्म, आदिः, यस्य जन्म स्थिति भङ्गस्य तत् जन्मादि"** "𑌜𑌨𑍍𑌮 𑌆𑌦𑌿𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌜𑌨𑍍𑌮𑌸𑍍𑌥𑌿𑌤𑌿 𑌭𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿" (ஜந்ம, ஆதி:, யஸ்ய ஜந்ம ஸ்திதி பங்கஸ்ய தத் ஜந்மாதி)

என்ற தத்குண ஸம்விக்ஞான பஹூவ்ரீஹியினால் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் என்ற அர்த்தம் கிடைக்கிறது. அந்யமான பதத்தின் அர்த்தத்திற்கு ப்ராதான்யம் எந்த ஸமாஸத்தில் ஏற்படுகிறதோ அதற்கு பஹூவ்ரீஹி ஸமாஸம் என்று பெயர். **पीताम्बरः,** 𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌃 (பீதாம்பர:) என்று ஒரு பதம். அந்த இடத்தில் விஷ்ணு என்று அர்த்தம். ஆனால், அந்த விஷ்ணுவோ **पीतं,** 𑌪𑍀𑌤𑌂 (பீதம்) என்ற பதத்தின் அர்த்தமாகவோ **अम्बरं,** 𑌅𑌮𑍍𑌬𑌰𑌂 (அம்பரம்) என்ற அர்த்தமாகவோ ஆகமாட்டார். இந்தப் பதங்களைக்காட்டிலும்வேறான **नारायणः, श्रीकान्तः, हरिः** 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃, 𑌶𑍍𑌰𑍀𑌕𑌾𑌨𑍍𑌤𑌃, 𑌹𑌰𑌿𑌃 (நாராயண:, ஸ்ரீகாந்த:, ஹரி:) என்ற ஏதோ ஒரு பதத்தின் அர்த்தமாக ஆகுவர். ஆகிலும் அப்படி அந்யபதத்தின் அர்த்தமான விஷ்ணுவானவர் **पीताम्बरः** 𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌃 (பீதாம்பர:) என்ற இடத்தில் அந்தப் பதங்களின் அர்த்தமாக ஆகாதபோனாலும், எந்த விஷ்ணுவினுடைய வஸ்த்ரமானது பொன் வர்ணமோ என்ற அர்த்தமுள்ள **'पीतं अम्बरं यस्यसः'** '𑌪𑍀𑌤𑌂 𑌅𑌮𑍍𑌬𑌰𑌂 𑌯𑌸𑍍𑌯𑌸𑌃' (பீதம் அம்பரம் யஸ்யஸ:) என்ற ஸமாஸத்தால் ப்ரதானமாக ஆகின்றார். இது **केवल बहुव्रीहि,** 𑌕𑍇𑌵𑌲𑌬𑌹𑍁𑌵𑍍𑌰𑍀𑌹𑌿 (கேவலபஹூவ்ரீஹி) ஸமாஸத்துக்கு உதாஹரணம். இந்த இடத்தில் ப்ரதானமான அர்த்தம் அந்யபதார்த்தம். அதாவது விஷ்ணு. அந்த விஷ்ணு இந்த இடத்தில் **पीताम्बरः** 𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌃 (பீதாம்பர:) என்ற பதத்தின் முக்யமான அர்த்தத்திற்குள் அடங்கவில்லை. சில விடங்களில் ப்ரதானமான அன்ய பதார்த்தங்கள்கூட அந்தப் பதத்தின் அர்த்தத்திற்குள் அடங்கினவைகளாகவேயிருக்கும். அந்த இடத்தில் **'तद्गुणसंविज्ञान बहुव्रीहि** 𑌤𑌦𑍍𑌗𑍁𑌣𑌸𑌂𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨 𑌬𑌹𑍁𑌵𑍍𑌰𑍀𑌹𑌿 (தத்குணஸம்விக்ஞாந பஹூவ்ரீஹி) என்று பெயர். அதாவது: ப்ரதானமாயும் அந்யபதார்த்த

மாயும் இருக்கிற அர்த்தத்திற்கு கௌணத்தன்மையை (அப்ரதாநம்) போதிக்கிற பஹுவ்ரீஹி என்பது அர்த்தம். அதற்கு உதாஹரணம்: **ब्रह्मादयः आगताः**, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌯𑌃 𑌆𑌗𑌤𑌾𑌃 (ப்ரம்மாதய: ஆகதா:) (ப்ரம்மாவை முதலாக உடையவர்கள் வந்தார்கள்) என்பது. '**ब्रह्मा आदिः येषां ब्रह्मविष्णु रुद्राणां ते**' '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌆𑌦𑌿𑌃 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌤𑍇' (ப்ரம்மா ஆதி: யேஷாம் ப்ரம்மவிஷ்ணு ருத்ராணாம் தே) என்ற ஸமாஸத்தால் ப்ரதானமாயும் **ब्रह्मादयः**, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌯𑌃 (ப்ரம்மாதய:) என்ற பதத்தின் அர்த்தமாகாமல் அந்ய பதத்தின் அர்த்தமாயும் **येषां**, 𑌯𑍇𑌷𑌾𑌂 (யேஷாம்) என்றதால் ஸூசனை செய்யப்பட்டதாயுமிருக்கிற **ब्रह्मविष्णुरुद्राः**, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌃 (ப்ரம்மவிஷ்ணுருத்ராள்) என்ற அர்த்தத்திற்குட்பட்டு ஏகதேசமாக இருக்கிற **ब्रह्मा**, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 (ப்ரம்மா) என்ற ப்ரதானமான அர்த்தத்திற்கு **ब्रह्मादयः**, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌯𑌃 (ப்ரம்மாதய:) என்ற பதத்திற்குள் இருக்கும் **ब्रह्मा**, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 (ப்ரம்மா) என்ற பதத்தின் அர்த்தமாக ஆகிறபடியால் கௌணத்வம் ஏற்படுகிறது.

ஆகையால் **ब्रह्मादयः**, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌯𑌃 (ப்ரம்மாதய:) என்ற இடத்தில் தத்குண ஸம்விக்ஞான பஹுவ்ரீஹி என்று சொல்லப்படுகிறது. அதுபோல் ப்ரக்ருதத்திலும் '**जन्म आदिः, यस्य जन्मस्थिति भंगस्य**' '𑌜𑌨𑍍𑌮 𑌆𑌦𑌿𑌃, 𑌯𑌸𑍍𑌯 𑌜𑌨𑍍𑌮𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌭𑌂𑌗𑌸𑍍𑌯' (ஜந்ம ஆதி:, யஸ்ய ஜந்ம ஸ்திதி பங்கஸ்ய) என்ற இடத்தில் **यस्य**, 𑌯𑌸𑍍𑌯 (யஸ்ய) என்ற பதத்தின் அர்த்தமாயும் ப்ரதானமாயும் இருக்கிற **जन्मस्थितिभंगं**, 𑌜𑌨𑍍𑌮𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌭𑌂𑌗𑌂 (ஜந்மஸ்திதிபங்கம்) என்ற அர்த்தத்திற்குள்ளடங்கிய **जन्म**, 𑌜𑌨𑍍𑌮 (ஜந்ம) என்ற ஏகதேசமான அர்த்தமானது **जन्मादि**, 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿 (ஜந்மாதி) என்ற பதத்திற்குட்பட்ட **जन्म**, 𑌜𑌨𑍍𑌮 (ஜந்ம) என்ற பதத்தின் அர்த்தமாகவே ஆகிறபடியால் **तद्गुणसंविज्ञान बहुव्रीहि**, 𑌤𑌦𑍍𑌗𑍁𑌣𑌸𑌂𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨 𑌬𑌹𑍁𑌵𑍍𑌰𑍀𑌹𑌿 (தத்குணஸம்விக்ஞாந பஹுவ்ரீஹி) என்றே சொல்லப்படும். இவ்விதமான ஸமாஸத்தால் **जन्मादि**, 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿 (ஜந்மாதி) என்ற பதத்திற்கு ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற அர்த்தம் ஏற்படுகிறது.

अस्य, 𑌅𑌸𑍍𑌯 (அஸ்ய) என்ற பதத்தின் அர்த்தம்: நாமரூபாத்மகமாயும், வெகுவிதமான கர்த்தாவோடும் போக்தாவோடுங்கூடினதாயும், இன்ன தேசத்தில்தான் இன்ன காலத்தில்தான் இன்ன க்ரியையின் பலத்தை அநுபவிக்க வேண்டியது என்ற வ்யவஸ்தையோடு கூடினதாயும், மனஸினாலுங்கூட இவ்விதம் செய்யலாமோ என்று ஆலோசிக்கக்கூடாததாயும் இருக்கிற இந்த த்ருச்ய ப்ரபஞ்சத்தினுடையது என்பது.

இதில் முதல் விசேஷணத்தால் இன்னது நாமப்ரபஞ்சம் இன்னது ரூபப்ரபஞ்சம் என்ற வகுப்பாக ப்ரபஞ்சத்தைப் பிரித்து, இன்னவிதமான நாம ப்ரபஞ்சத்துக்கு இன்னவிதமான ரூபப்ரபஞ்சத்தோடு ஸம்பந்தமென்றும் பகுத்தறிவித்து ஸ்ருஷ்டிக்கப்பட்டது என்ற அர்த்தம் கிடைக்கிறபடியால், இவ்விதமான ஸ்ருஷ்டி சேதனத்தினுடைய ஸ்ருஷ்டியாகத்தான் இருக்கவேண்டுமே தவிர அசேதனத்தின் ஸ்ருஷ்டியாக இருக்க ந்யாயமில்லை என்று தெரிகிறது. ஒருகுயவன் **घटः**, 𑌘𑌟𑌃 (கட:) என்ற நாமப்ரபஞ்சத்தோடுஸம்பந்தப்பட்ட வயிறுபெருத்தும் கழுத்துச்சிறுத்தும் இருக்கிற ஒரு ஆகார விசேஷமாகிய அர்த்தப்ரபஞ்சத்தைத் தன் புத்தியில் முதலில் தீர்மானித்துக்கொண்டு இந்த ஆகாரவிசேஷமான அர்த்த ப்ரபஞ்சத்திற்கு இந்த நாம ப்ரபஞ்சத்தோடுதான் ஸம்பந்தம் என்ற அறிவுடன் எப்படிக்குடத்தை ஸ்ருஷடிக்கிறானோ, அது அசேதனத்தினுடைய கார்யமாகாதென்பது லோக ப்ரஸித்தம். அதுபோலவே இப்ரபஞ்சத்திலும் இரண்டு கால், இரண்டு கை உள்ள ஆகாரவிசேஷமான அர்த்தப்ரபஞ்சத்திற்கு மனுஷ்யன் என்ற நாமப்ரபஞ்சத்தோடு ஸம்பந்தமென்றும், நாலு கால்களோடு கூடின ஆகார விசேஷமான அர்த்தப்ரபஞ்சத்திற்கு ம்ருகம் என்ற நாமப்ரபஞ்சத்தோடு ஸம்பந்தமென்றும், வ்யவஸ்தை ஏற்பட்டிருக்கிறபடியால், முன்பே இப்படி வ்யவஸ்தையைக் கல்பித்து ஒரு புருஷனால் இந்த ஜகத் உண்டாக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிகிறது. ஆகையால் இப்ரபஞ்சம் சேதன கார்யமே.

'**इदं जगत्, चेतनकर्तृकं, नामरूपात्मकत्वात् घटवत्**' '𑌇𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍, 𑌚𑍇𑌤𑌨𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌂, 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌾𑌤𑍍𑌮𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌘𑌟𑌵𑌤𑍍' (இதம்ஜகத்)

சேதநகர்த்ருகம், நாமரூபாத்மகத்வாத், கடவத்) என்ற "அநுமானம், ப்ரபஞ்சம், சேதனம், கார்யம், என்பதில்" ப்ரமாணமாகவும் முதல் விசேஷணத்தால் ப்ரகாசப்படுத்தப்படுகிறது.

இரண்டாவது விசேஷணத்தால் கர்த்ரு போக்த்ரு ஸ்வரூபமான இப்ரபஞ்சத்தைச் சேதனமான வஸ்து ஸ்ருஷ்டிக்கிறதாயிருந்தாலும் சேதனமான ஜீவனே ஸ்ருஷ்டித்திருக்க வேண்டும். ப்ரம்மத்தை எதற்காகக் காரணமென்னவென்று சொல்லவேண்டும்? என்ற சங்கையும் தள்ளப்படுகிறது.

அதாவது:— हिरण्यगर्भः, ഹിരണ്യഗർഭഃ (ஹிரண்யகர்ப்ப: ஹிரண்யகர்ப்பன் முதல் எவ்விதமான ஜீவர்களைப் பார்த்தாலும் கர்த்தாவாகவோ போக்தாவாகவோதான் காணப்படுகிறார்கள். ஒரு ச்ராத்தாதிகளான கர்மாக்களில் பித்ருக்களான ஜீவர்களும் புத்ரர்களான ஜீவர்களும் ஏற்படுகிறார்கள்; அதில் புத்ரர்களான ஜீவர்களெல்லாம் கர்த்தாக்களாகவும், பித்ருக்களான ஜீவர்களெல்லாம் போக்தாக்களாகவுமே காணப்படுகிறார்கள். இப்படியே ஸகல ஜீவர்களும் கர்த்தாவாகவோ போக்தாவாகவோதான் இருக்கிறார்கள். ஆகையால் ஸ்ருஷ்டிக்கத்தகுந்த ஜகத்துக்குள்ளேயே அடங்கினவர்களாக இந்த ஜீவர்கள் ஆகிறபடியால், இந்த ஜீவகோடிகளுக்குள் உத்க்ருஷ்டனான ஹிரண்யகர்ப்பனென்ற ஜீவன்கூட ஜகத்துக்கு ஸ்ருஷ்டாவாக ஆக முடியாது. "यो ब्रह्माणं विदधाति पूर्वं" "യോ ബ്രഹ്മാണം വിദധാതി പൂർവം" (யோ ப்ரம்மாணம் விததாதி பூர்வம்) என்ற ச்ருதியால் ஹிரண்யகர்ப்பனும் ஸ்ருஷ்டிக்கப்பட்டானென்று தெரிகிறது. அப்படியிருக்க அந்த ஹிரண்யகர்ப்பனுக்கு ஸ்ருஷ்டி கர்த்ருத்வம் எப்படி வரும்? இப்படி ஹிரண்யகர்ப்பனுக்கே ஸ்ருஷ்டி கர்த்ருத்வம் இல்லையென்றிருக்க மற்ற ஜீவர்களுக்கில்லையென்பது சொல்லவும் வேண்டுமோ!

"हिरण्यगर्भादयः, स्रष्टारो न भवन्ति,
सृज्यकोटि प्रविष्टत्वात्, घटवत्"

"ഹിരണ്യഗർഭാദയഃ, സ്രഷ്ടാരോ ന ഭവന്തി,
സൃജ്യകോടി പ്രവിഷ്ടത്വാത്, ഘടവത്"

(ஹிரண்யகர்ப்பாதய:, ஸ்ரஷ்டாரோ நபவந்தி,
ஸ்ருஜ்யகோடி ப்ரவிஷ்டத்வாத், கடவத்"

என்ற அநுமானமும் ஹிரண்யகர்ப்பாதி ஜீவர்கள் ஜகத் கர்த்தாக்களாக ஆகமாட்டார்கள் என்றதில் ப்ரமாணமாகவும் இரண்டாவது விசேஷணத்தால் ஸூசிப்பிக்கப்படுகின்றது.

மூன்றாவது விசேஷணத்தால் இப்ரபஞ்சத்தில் இன்ன கர்மாவுக்கு இன்னது பலன். அதை இன்ன தேசத்தில் இன்னகாலத்தில் இன்ன நிமித்தத்தில்தான் அடையவேண்டுமென்ற வ்யவஸ்தை காணப்படுகின்றது. அதாவது, ஜ்யோதிஷ்டோமத்தின் பலன் ஸ்வர்க்கம் அந்த ஸ்வர்க்கமாகிய க்ரியாபலத்திற்கு மஹாமேருவின் சிகரந்தான் அநுபவிக்கவேண்டிய தேசம். அதாவது மஹாமேருவின் சிகரதேசத்தை விட்டால் மற்றொரு தேசத்தில் ஸ்வர்க்கம் என்பதை அநுபவிக்க முடியாது என்றும், அப்படியே ஸ்வர்க்க லோகத்திற்குக் காரணமான ஜ்யோதிஷ்டோமம் என்ற யாகத்தைச் செய்தவன் மரித்த பிற்பாடுதான் அந்த ஸ்வர்க்க லோகத்தை யடைய முடியுமென்றும், அதற்கு முன்காலத்தில் முடியாதென்றும், அதிலும் அவன் உத்தராயணத்தில் மரித்தால்தான் மரித்த பிற்பாடும் அந்த ஸ்வர்க்க லோகத்தையடைய முடியுமென்றும், ஸ்வர்க்க லோகத்தை யநுபவிக்க இவ்விதம் மஹாமேருவினுடைய சிகரம் தேசம், மரணத்துக்குப் பிறகுகாலம், உத்தராயண மரணம் நிமித்தம் என்று தேச கால நிமித்த வ்யவஸ்தைகள் ஏற்பட்டிருக்கின்றன. அப்படி ஒவ்வொரு க்ரியாபலன்களிலும் இந்த தேச, கால, நிமித்த வ்யவஸ்தைகள் இருக்கின்றன.

ஆகையால் ஸகல க்ரியாபலன்களிலும் தேசகால நிமித்த வ்யவஸ்தையை யறிந்த ஸர்வஜ்ஞனை ஒரு புருஷனைத்தான் தம்மைக் கொடுக்கும் दाता, ദാതാ (தாதா)வாக அபேக்ஷிக்கின்றன என்று தெரிகிறது. லோகத்திலோ ஒரு வேலைக்காரன் வேலையைச்செய்தால்

அந்த வேலையின் பலன் அந்த வேலையை दाता, 𑌦𑌾𑌤𑌾 (தாதா) வாக அபேக்ஷிக்கிறதில்லை. தேசகால நிமித்தங்களை யறிந்த ஒரு புருஷனைத்தான் दाता, 𑌦𑌾𑌤𑌾 (தாதா)வாக அபேக்ஷிக்கின்றது. அப்படி, லோகத்திலுள்ள ஸேவாபலத்திற்கே தேசகால நிமித்தங்களை யறிந்த ஒரு புருஷன்தான் दाता, 𑌦𑌾𑌤𑌾 (தாதா)வாக ஏற்படவேண்டியிருக்க வைதிகமான கர்ம பலத்திற்கும் தேசகால நிமித்தங்களை யறிந்த ஸர்வக்ஞனை புருஷன்தான் दाता, 𑌦𑌾𑌤𑌾 (தாதா)வாக இருக்க வேண்டுமென்று நிச்சயமாகத் தெரிகிறது. இதனால், जगत्स्रष्टा, 𑌜𑌗𑌤𑍍𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 (ஜகத்ச்ரஷ்டா) வான ப்ரம்மத்தினிடத்தில் ஸர்வக்ஞத்வமும் ஸித்திக்கின்றது.

"कर्मफलं, देशकालनिमित्ताभिज्ञदातृकं,
फलत्वात्, सेवाफलवत्"

"𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌂, 𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌭𑌿𑌜𑍍𑌞𑌦𑌾𑌤𑍃𑌕𑌂,
𑌫𑌲𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌸𑍇𑌵𑌾𑌫𑌲𑌵𑌤𑍍"

(கர்மபலம், தேசகாலநிமித்தாபிக்ஞதாத்ருகம்,
பலத்வாத், ஸேவாபலவத்)

என்ற அனுமானமானது ஜகத்காரணமான ப்ரம்மம் ஸர்வக்ஞன் என்று சொல்லுகிற விஷயத்தில் ப்ரமாணமாகவும் மூன்றாவது விசேஷணத்தால் ஸூசிப்பிக்கப்படுகின்றது.

நான்காவது விசேஷணத்தால் இப்ரபஞ்சத்தை மனஸினாலுங்கூட இப்படிச்செய்யலாமோ என்று நினைக்கக்கூடாததாக இருக்கிறது; அதாவது: ஒரு ஜீவனாலுங்கூட ஒரு சரீரமாவது ஸ்ருஷ்டிக்கக்கூடியதாகவில்லை. இந்த ஜகத்ரசனை அல்ப சக்தியுள்ள புருஷனால் ஸ்ருஷ்டிக்கக் கூடியதன்று என்று ப்ரத்யக்ஷமாகவே தெரிகிறது. ஆகையால் இதை ஸ்ருஷ்டித்தவன் ஸர்வசக்தியுள்ளவனாகவே யிருக்கவேண்டும், ஆகையால் இந்த ஜகத்துக்குக் காரணமான ப்ரம்மம் ஸர்வசக்தியுள்ளது.

199513

Regd. No. M-2970. Regd. No. M-2970

மாதா மாதம்
ஒரு ரூபாய் சேர்த்து வைத்தால்!

7 வருஷத்திற்குப் பிறகு	ரூ. 106-8-0
6 வருஷத்திற்குப் பிறகு	ரூ. 87-12-0
5 வருஷத்திற்குப் பிறகு	ரூ. 70-12-0
4 வருஷத்திற்குப் பிறகு	ரூ 54-6-0
3 வருஷத்திற்குப் பிறகு	ரூ. 39-8-0
2 வருஷத்திற்குப் பிறகு	ரூ 25-8-0

யாவரும் செய்யக்கூடியது ; மிகவும் மலிவானது வட்டியை கவனிக்கவும். "பலதுளி பெருவெள்ளம்",

பிக்ஸட் டிபாஸிட்டுகள் கீழ்கண்ட விகிதப்படி பெற்றுக்கொள்ளப்படும் :—

3 மாதங்களுக்கு	...	100-க்கு 4	வீதம்
6 மாதங்களுக்கு	...	100-க்கு $4\frac{1}{2}$	வீதம்
1 வருஷத்திற்கு	...	100-க்கு 5	வீதம்

ஒரு வருஷத்திற்கு மேல்பட்டதற்கு ஸ்பெஷல் விகிதங்கள்.

இந்தியன் ரிலீப் பாங்கி லிமிட்டெட்,

1/99, கிடங்கு தெரு, சென்னை.

Avt. 13-V. 3.

Edited and published by Thethiyur Subramanya Sastrigal, and printed at the Harisamaya Divakaram Press, Madura: